**பிக்ஹ் அல் அவ்லவியாவை முஸ்லிம் சிறுபான்மை நாடுகளில் நடைமுறைப்படுத்துதல் இலங்கை முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்திய சில முற்குறிப்புக்கள்**

# IMPLEMENTATION OF THE CONCEPT OF FIKH AL AWLAVIYA IN MUSLIM MINORITY COUNTRIES A PRELIMINARY STUDY BASED ON SRI LANKAN MUSLIM COMMUNITY

**[1]Mr.ABM.Aliyar, [2]Mr.MT.Habeebullah**

**[1]Senior Lecturer, Department of Arabic Language, Facutly of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Sri Lanka**

**[2] Department of Arabic Language, Facutly of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Sri Lanka**

**Corresponding email: abmaliyar@gmail.com, habeeb09@gmail.com**

**Abstract** : The concept of Fikh al Awlaviya is an important concept of Islamic sharia that is mostly discussed in contemporary world, especially in Muslim minority countries. The Fikh al Awlaviya categorized the Sharia affairs considering the placement of values system In the earlier period, it was called "categorizing of Deeds" [27] The Islamic law consists of the fundamental sources of Holy Quran and the traditions of prophet Mohammed (sal) and also includes the secondary sources which are not against the law of Sharia that were made by the way of Ijdihath. Prioritizing fikh has given rise to a state of confusion among the Muslim community in Sri Lanka. As such there is inefficiency in the smooth functioning of Dawa activities causing a negative impact on the Muslim community. As a result, this has caused clash of opinions and conflict among the pluralistic society. Through this study, the researcher aims to provide knowledge on the priority of fikh in Sharia perspective, It is significant and a need in a minority country to identify the challenges during the implementation of this concept. The researcher used qualitative research methodology. The primary data was collected through interview and observation and secondary data from books, magazine, newspaper and web sites. The findings reveal that the concept of priority is not popular in Muslim community in Sri Lanka and there is confusion among the people in understanding the concept. Therefore this research will provide some guidance and basic knowledge in this area with strategies to overcome challenges of this concept.

**Key words:** Sharia , Fikh al Awlaviya , Ijdihath , Muslim minority , Maslha Al Mursalah

[27] Mohamed al Vakeeki : fikhul awlaviyath page 15

**ஆய்வு அறிமுகம் ( Introduction ) :**

இன்று உலகலாவிய ரீதியில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை ¼ ஐ விடக் அதிகரித்துள்ளது. ஐரோப்பிய ஆசிய மற்றும் ஆபிக்க நாடுகளில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் சனத்தொகை அடர்த்தி வருடா வருடம் உயர்ந்து கொண்டே செல்கின்றன. இந்நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் தமது சக்திக்குட்பட்ட வகையில் இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றிய போதிலும் பெரும்பான்மைக்கு மத்தியில் வாழும் அவர்கள் இஸ்லாமிய சட்டங்களை அமுல்படுத்துவதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியும் வருகின்றனர். இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பான தெளிவு அதிகமானோருக்கு ஓரளவு இருந்த போதிலும் முஸ்லிம் சிறுபான்மை நாடுகளில் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் பலரிடம் மயக்க நிலை காணப்படுகின்றது. ஐரோப்பா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் ஓரளவு இக்கருத்தியலில் தெளிவு பெற்றிருப்பது போன்று இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் பெரியளவு புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மார்க்கம் என்றால் சொல்லப்பட்ட அனைத்தையும் செய்யத்தானே வேண்டும் என்ற உணர்வு நிலையும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

உண்மையில் இஸ்லாமிய சட்டத்துறையில் அதன் உள்ளடக்கங்களில் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கரு பன்மைத்துவ நாட்டில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் அனைவரும் முறையான தெளிவினைக் கொண்டிருப்பது அவசியமாகும். ஏனெனில் இஸ்லாமிய சட்டங்கள் அனைத்தையும் எடுத்த எடுப்பிலேயே உடனடியாக நடைமுறைப்படுத்திவிட வேண்டும் என்ற தீவிர உணர்வு முஸ்லிமின் உள்ளத்தில் இருப்பது வரவேற்கத்தக்கது என்ற போதிலும் பன்மைத்துவ சமூக அமைப்பில் அதன் தேவைப்பாடு அவசியம் நடைமுறைப்படுத்தலில் உள்ள சாத்தியப்பாடு குறித்து சிந்தித்ததன் பின்னரே மேற்கொள்வது பொருத்தமாக அமையும்.

இலங்கை தேசத்தைப் பொருத்த வரையில் அது பெரும்பான்மை பௌத்தர்களையும் இரண்டாம் நிலையில் தமிழர்களையும் கொண்டமைந்த ஒரு நாடு. முதன்மைப்படுத்தி அழுத்தமாக முஸ்லிம்கள் கொள்கையாளும் நடைமுறை ரீதியாகவும் முதன்மைப்படுத்தி முன்வைக்க வேண்டியப பல அடிப்படை அம்சங்கள் காணப்படுகின்றன.

இக்கருத்தியலை மையப்படுத்திய வகையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இறுதியில் இவ்வாய்வு பிக்ஹ் அல் அவ்லவிய்யா பற்றிய ஒரு தெளிவையும் பன்மைத்துவ நாடுகளில் அதன் தேவை எத்தகையது என்பதையும் முன்வைப்பதாக அமையும்.

**ஆய்வின் நோக்கங்கள்: (**Purpose of the study)

1. பிக்ஹ் அல் அவ்லவிய்யா என்ற எண்ணக்கரு தொடர்பான விளக்கத்தையும் அது தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தையும் விளக்கல்
2. முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளிலும் குறிப்பாக இலங்கை போன்ற நாட்டிலும் பிக்ஹ் அல் அவ்லவியாவின் தேவை, அவசியம் என்பவற்றை உணர்த்துதல்
3. பிக்ஹ் அல் அவ்லவிய்யாவை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களையும் பிரச்சினைகளையும் இனங்காணல்.

**ஆய்வு முறையியல்:** (Methodology)

இவ்வாய்வுக்கு முதல் நிலைத்தரவுகள், வழிநிலைத்தரவுகள் ஆகியன ஆய்வு மூலங்களாக கொள்ளப்படுகின்றன.

01. முதல் நிலைத்தரவுகள் ( Primary Data ):

(அ) கட்டமைப்பு சார்ந்த பேட்டி முறை

(இ) களவாய்வு

02. இரண்டாம் நிலைத் தரவுகள் ( Secondary Data):

(அ) நூல்கள்

(ஆ) சஞ்சிகைகள்

(இ) பத்திரிகைகள்

மேற்படி திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஒன்றாகவும் அமைந்துள்ளன.

**கடந்த கால இலக்கிய மீளாய்வு (Literary Review)**

பொதுவாக பிகஹ் அல் அவ்லவிய்யா தொடர்பாக கட்டுரைகள் ஆய்வுகள் சில ஆங்காங்கே வெளிவந்த போதிலும் நூல்களைப் பொறுத்தவரையில் பெரியளவு வெளிவரவில்லை என்றுதான் கூறவேண்டும். இந்தவகையில் நூல்களில் அமெரிக்காவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் வெளியீடாக வந்த கலாநிதி முஹம்மத் அல் வகீலி அவர்களின(1997) ,, பிக்ஹ் அல் அவ்லவிய்யாத்'' என்ற அறபு நூலும் , இஸ்லாமிய சிந்தனையாளர் கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி அவர்களின்(1985) ,, எதிர்காலங்களில் இஸ்லாமிய இயக்கங்கள் முதன்மைப்படுத்த

வேண்டியவை" என்ற அறபு நூலும் இத்துறையில் எழுதப்பட்ட முக்கிய நூல்களாகும். இவ்வாறே கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி , செய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி , உஸ்தாத் ஷகீப் அல் அர்ஸலான் , செய்க ஜமாலுத்தீன் ஆப்கானி , செய்க் முஹம்மது அப்துஹு , செய்க்ரஷீத் அர் ரிழா , உஸ்தாத் முஹம்மத் குத்ப் , இமாம் ஹஸன் அல் பன்னா போன்ற அறிஞர்களும் அவர்களின் நூல்களில் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அல் அஹ்ராம் (1987) , ஸவ்த்துல் குவைத் (1993) ஆகிய அரபு பத்திரிகைளிலும் „இஸ்லாமிய நிந்தனை" (2012) சஞ்சிகை , மீள்பார்வை போன்ற தமிழ் பத்திரிகையிலும் (2014) பிக்ஹ் அல் அவ்லவிய்யா தொடர்பாக சிறியளவிலான விளக்கங்கள் வெளிவந்துள்ளன. எனினும் தமிழ் மொழிகளில் இத்தலைப்பு தொடர்பான ஆக்கங்கள் வெளிவருவது மிக அரிதாகவே உள்ளது.

## ஆய்வின் மையம் : (ஆய்வு பற்றிய கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும்: Discussion & Findings)

### பிக்ஹ் அல் அவ்லவிய்யாவும் அதன் அவசியமும் :

இஸ்லாமிய சட்டத்துறையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் "பிக்ஹ்" என்ற பதம் தெளிவுபடுத்தல் , விளக்கிவைத்தல் வார்த்தைகளிலுள்ள சிக்கல்களை நீக்குதல் போன்ற கருத்துக்கள் வழங்கப்படுகின்றது. இஸ்லாமிய பரிபாஷையில் " பருவ வயதை அடைந்த புத்தி சுவாதினமுள்ள ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படும் அனைத்து விவகாரங்களுக்கும் அடிப்படை மூலாதாரங்களான குர்ஆன் சுன்னா வழியில் நின்று ஏனைய துணைமூலாதாரங்களின் வழியில் நின்று தெளிவுபடுத்தும் கலையே பிக்ஹ் ஆகும்."[28]

மனிதனின் அன்றாட வாழ்வில் தோன்றும் சகல பிரச்சினைகளுக்கும் பிக்ஹ் கலை தீர்வினை முன்வைக்கின்ற அதே வேளை கால இட சூழல் என்வற்றை கவனத்திற் கொண்டு பிரச்சினைகளின் தன்மை அதன் கனதி என்பவற்றுக் கேற்ப அவைகளை தராதரப்படுத்தியுள்ளது. வாஜிப், பர்ள், சுன்னத், ஹராம், மக்றூஹ், முபாஹ் என தராதரப்படுத்தியுள்ளதோடு ழரூரிய்யாத்(அடிப்படைத் தேவைகள்/தவிர்க்க முடியாதவைகள்) ஹாஜாத் (தேவைகள்) தஹ்ஸீனாத் (மேலதிக தேவைகள்) என்ற மூன்று அடிப்படையான அம்சங்களையும் கொண்டே சட்டங்களை இயற்றுகின்றன. இந்த பின்புலத்தில் இருந்து நோக்கும் போதும் பிக்ஹ் அல் அவ்லவிய்யா முதன்மை பெறுகிறது எனலாம். ஆரம்பத்தில் பிக்ஹ் அல் அவ்லவிய்யா நடைமுறையில் காணப்பட்ட போதும் நவீன காலப்பிரிவில் அதன் முக்கியத்துவமும் தேவையும் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. „ பிக்ஹ் அல்

[28] .கல்லாப் அப்துல் வஹ்ஹாப் 1972, உஸூலுல் பிக்ஹ் , தாருல் கலம் பக் 10

அவ்லவிய்யா தொடர்பில் அதன் தேவை குறித்து அதிகம் பேசியவராக நவீன இஸ்லாமிய முன்னோடி கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி கருதப்படுகிறார்‘‘[29]

பிக்ஹ் அல் அவ்லவிய்யா என்பதற்கு பலர் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர்.‘‘ஒரு கலையின் தரம் அது வேண்டி நிற்கும் சூழல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு எதனை முற்படுத்துவது பொருத்தமானதாக இருக்குமோ அதனை முற்படுத்துவதை விளக்கும் ஷரீஆவின் சட்டங்களை உள்ளடக்கிய ஒரு கலையே பிக்ஹ் அல்அவ்லவிய்யா ஆகும்‘‘[30]

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி குறிப்படும் போது‘‘ ஒன்றை அதற்குறிய பொருத்தமான இடத்தில் வைப்பதும் எதனை முற்படுத்த வேண்டுமோ அதனை பிற்படுத்தாது முற்படுத்துவதும் பிற்படுத்த வேண்டியதை முற்படுத்தாமல் இருப்பதும் பாரிய விடயத்தை சிறியதாக கருதாமல் இருப்பதும் சிறிய விடயத்தை பாரியதாக கருதாமல் இருப்பதுமே பிக்ஹ் அல் அவ்லவிய்யா ஆகும்.‘‘[31]

பிக்ஹ் அல் அவ்லவிய்யா கலையானது இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோறறம் பெற்றது எனலாம்.

1.ஷரிஅத்தின் செயற்பாடுகளின் தரங்கள் தொடர்பாக உருவான கருத்துக்கள்

2. த.்.வா வழிமுறைகளில் படிமுறை ரீதியான அணுகுமுறைகள் தெடர்பாக தோன்றிய கருத்துக்கள்

சட்டத்துறையில் முதன்மைப்படுத்தல் என்ற விடயம் மிக ஆரம்ப காலத்திலேயே தோற்றம் பெற்ற கலையாக விளங்குகிறது. நபி(ஸல்) அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட புனித அல் குர்ஆன் 23 வருட காலமாக படிப்படியாக எதனை முதன்மைப்படுத்த வேண்டுமோ அதனை முதன்மைப்படுத்தும் வகையில் இறக்கியருப்பட்டது. முதன்மைப்படுத்தல் பற்றி அல்குர்ஆனிலும் பல வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்லா , அவ்லவிய்யா என்ற பதங்களை குர்ஆன் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதன் மூலம் இச்சிந்தனையை முன்வைத்துள்ளது எனலாம். ‘‘ புனித அல்குர்ஆனில் பதினொரு இடங்களில்‘‘ அவ்லா‘‘ (முதன்மைப்படுத்துதல்) என்ற பதம் இடங்களிலும் ஏழு ஸுராககளிலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம‘‘[32]. அல் குர்ஆன் நபி(ஸல்) அவர்கள் மிகப் பொருத்தமானவர் முதன்மைப்படுத்த வேண்டியவர் பின்பற்றுவதற்கு தகுதியானவர் என்பதை சூறா ஆல இம்றானில் 62 இல் குறிப்பிட்டிருக்கிறது.

நபி (ஸல்) அவர்களும் கால இட சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப முதன்மைப்படுத்தலை கருத்திற் கொண்டு பேசியிருக்கிறார்கள். உதாரணங்கள் பல ஹதீஸ்களில் உள்ளன.‘‘ நபி

[29] 15 முஹம்மத் அல் வகீலி : பிக்ஹ் அல் அவ்லவிய்யா பக்-15
[30] பிக்ஹ அல் அவ்லவிய்ய பக 15
[31] கர்ளாவி “அவ்லவிய்யாத்துல் அல் ஹரகா அல் இஸ்லாமிய்யா பக் 34
[32] .முஹம்மத் புவாத் அப்புல் வாகி “அல்மு.்ஜமுல் முபஹ்ரஸ் லில் அல்பாழ் அல் குர்ஆனில் கரீம்” பக் 757

(ஸல்)அவர்களிடம் செயற்பாடுகளில் மிகச் சிறந்தத எது என வினவப்பட்டபோது'' அல்லாஹ்வையும் துாதரையும் விசுவாசிப்பது என பதிலளித்தார்கள் .பின்னர் எது என வினவ ''அல்லாஹ்வின் பாதையில் போராடுவது'' எனவும் பின்னர் எது சிறந்தது என வினவ நபயவர்கள் '' ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்'' என பதிலளித்தார்கள்.''[33]

இவ்வாறு சந்தர்ப்பம், சூழல், இடம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தோழர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பது நபியவர்களின் வழிமுறையாகக் காணப்பட்டது. இக்கருத்தியல்களைச் சார்ந்த ஹதிஸ்கள் பல இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

**சிறுபான்மை நாடுகளில் பிக்ஹுல் அவ்லவிய்யா:**

சிறுபான்மை நாடுகளில் பிக்ஹ் அல் அவ்லவிய்யாவின் தேவையும் அவசியமும் பலராலும் உணரப்படடிருப்பதைக் காணலாம்.'' இன்று உலகின் பல நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்து வருவதும் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதும் அவதானிக்கப்பட்டு வரும் ஒரு அம்சமாகும். இந்த வகையில் முஸ்லிம் நாடுகளில் அராஜக ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களின் கொடுமைகளை தாங்க முடியாது அங்கிருந்து புலம் பெயர்ந்து ஐரொப்பிய அமெரிகக நாடுகளில் வாழும் முஸ்லிம் அறிஞர்கள் பன்மைத்துவ சமூகத்தின் மத்தியில் வாழும் முஸ்லிம்களின் உண்மையான பிரச்சினைகளை இனங்கண்டு சிறுபான்மையினருக்கான சட்டங்கள் தொடர்பாக ஆய்வுகளை நடாத்தலானார்கள்''[34].

அமெரிக்காவில் முஸ்லிம் அறிஞர்களால் நிறுவப்பட்ட இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்(IIIT) ஆய்வு மற்றும் பத்வாவுக்கான ஐரோப்பிய முஸ்லிம் மன்றம் என்பன சிறுபான்மையினருக்கான சட்ட விடயங்களிலும் சமூக சீர்திருத்தத்திலும் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என்பதில் அதிக ஈடுபாடுகளை காட்டி வருகின்றனர். 2001 அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலின் பின்புலத்தில் இஸ்லாம் தொடர்பான பிழையான கருத்துக்களை அமெரிக்க மக்களிடையே பரப்ப யூதர்கள் முனைந்த போது அதனை முறியடிப்பதிலும் இஸ்லாம் தொடர்பான சரியான புரிதலை வழங்குவதிலும் IIIT நிறுவனம் பாரிய பங்காற்றியுள்ளது என்பதை அறியலாம்.[35]

இன்று இஸ்லாமிய உலகில் செல்வாக்குப் பெற்று விளங்கும் சமய நிறுவனங்களான மஜ்மஉல் பிக்ஹுல் இஸ்லாமி , றாபிதத்துல் ஆலமுல் இஸ்லாமி , லஜ்னத்து உலமா அல் இமாம் அல் ஹரமைன், இத்திஹாத் அல் உலமா அல் முஸ்லிமீன் போன்ற அமைப்புக்கள் பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பான கலந்துரையாடல்களையும் கருத்துக்களையும் பரிமாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இலங்கை முஸ்லிம்களும் பிக்ஹுல் அவ்லவிய்யாவும்**

[33] .இமாம் புகாரி ஸஹிஹ் அல் புகாரி , பாகம் 01 பக்கம் 77
[34] உமர் ஹஸ்னா ் கிதாப் அல் உம்மா 2009 பக்கம் 06
[35] இஸாமுல் பஷீர் 2010 : நஹ்வ நஹ்ழத்தில் முன்ததா அல் ஹழாரி : முன்ததா அந் நஹ்ழா அத்தவாஸுல் ஹழாரி சூடான் 2010 பக் 07

இலங்கையின் சகல பகுதிகளிலும் செரிந்து வாழும் முஸ்லிம்கள் பன்மைத்துவ சமூக அமைப்பு சூழலில் இஸ்லாமிய சட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும். அத்துடன் அவற்றில் எதனை முதன்மைபடுத்துவது பன்மைத்துவ சமூக அமைப்புகளின் மத்தியில் வாழும் முஸ்லிம் அதிகம் அழுத்தம் கொடுத்து நோக்க வேண்டியது எவை என்பன போன்ற விடயங்களிலும் அதிக கரிசனை காட்டுவது இன்றியமையாதவை.

எனினும் இலஙகை முஸ்லிம்களிடையே முதன்மைபடுத்தல் விடயத்தில் பெரிய தெளிவின்மை சகல தரப்பினரிடமும் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஷரீஆவின் சட்டங்களிலுள்ள இலகு தன்மையை புரிந்து கொள்ளல், சட்டங்களில் நெகிழும் நெகிழாப் போக்குகளை அறிதல், பொது நலனைக் கருத்திற் கொள்ளல் போன்ற விடயங்களில் சரியான பின்புலம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இஸ்லாமிய ஷரீஆவின் சட்டங்கள் அனத்தையும் கால இட சூழல் சந்தர்ப்பம் என்பவற்றையெல்லாம் பாராது உடனடியாக அமுலாக்கம் செய்து விட வேண்டும் என்று தீவிரப்படுவர்களும் உள்ளனர். உள்ளடக்கங்களைக் காட்டிலும் வெளித்தோற்றப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குவதும் அதி முக்கியமானதை காட்டிலும் முக்கியமானதற்கும் சமூக நலனை விட சுயநலனுக்கு முதன்மை அளிப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. பல தடவை சுன்னத்தான ஹஜ்ஜுகள் செய்வதைக் காட்டிலும் சமூகத்தில் இடைவெளியாகவுள்ள சமூகக் கடமைகளை மேற்கொள்வதும் பல இலட்ச ரூபாக்களில் பள்ளிகளை நிர்மானிப்பதைக் காட்டிலும் சமூகத்தில் துறைசார்ந்த வல்லுனர்களை உருவாக்குதல் போன்றன இன்று முதன்மைபடுத்த வேண்டியவைகளாக உள்ளன.

அற்கமான சில்லறையான அம்சங்களில் கருத்து முரண்பாடு கொண்டு சமூக பிளவுகளையும் பிரிவுகளையும் வளர்ப்பதைக் காட்டிலும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வதும் இரு வகையான நிர்ப்பந்த சூழலுக்கு உட்படும் சந்தர்ப்பங்களில் தீமைகள் குறைந்த நிலையிலுள்ளதை எடுத்துக் கொள்வதும் இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.

இவ்விடயங்கள் இஸ்லாமிய சட்ட வரலாற்றில் அந்தந்த கால சூழ்நிலைகளில் அறிஞர்களால் கலந்துரையாடி அவற்றுக்கான சட்ட வரையறைகள் வகுக்கப்பட்ட போதிலும் இதன் கனதி தற்காலத்தில் அதிகரித்துள்ளது என்றே கூற வேண்டும். பெரும்பாலான உலமாக்கள் கல்வியியலாளர்கள் சமூக பொறுப்புக்களில் அங்கம் வகிப்போர்கள் ஆகியோர் இவை பற்றிய தெளிவின்மையுடனேயே காணப்படுகின்றனர்.

**பிக்ஹுல் அவ்லவிய்யாவை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்**

இலங்கை போன்ற நாடுகளில் பிக்ஹுல் அவ்லவிய்யாவை நடைமுறைப்படுத்த முனையும் போது பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளன. இந்த வகையில் பின்வரும் சவால்களை கண்டு பிடிப்புகளாகக் குறிப்பிடலாம்

1. பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பாக விளிப்புணர்வுகள் மக்களிடம் காணப்படாமை

2. பெரும்பாலான உலமாக்களுக்கு இக்கலை தொர்பான தெளிவு சென்றடையாமை

3. சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆளணிகள் பற்றாக்குறையாக உள்ளமை

4. பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை

5. பிக்ஹுல் அவ்லவிய்யா என்ற விடயம் ஷரீஆவுக்கு முரண்பட்டதாக ஆகிவிடும் என்ற சில உலமாக்களிடம் காணப்படும் அச்ச நிலையும் அவற்றிலிருந்த ஒதுங்கும் நிலையும் காணப்படல்

6. சர்தேச இஸ்லாமிய அறிஞர்கள் பல்கலைக்கழங்கள் என்பவற்றுடனான தொடர்பு இல்லாமை

7. அதிதீவிர போக்குக் கொண்டவர்களின் எதிர்ப்பு

**சிபாரிசுகள்**

பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பாக கலந்துரையாடல்கள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன

1. பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பான விழிப்புணர்வு அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்.குறிப்பாக மக்களை வழிநடாத்தக்கூடிய உலமாக்களுக்கு இவை தெடர்பான அறவூட்டல் நிகழ்ச்சி நிரல் கொண்டு செல்லப்பட வேண்டும்.

2. உலமாக்களில் இஸ்லாமிய சட்டக்கலையுடன் தொடர்புடைய நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களை உருவாக்க வேண்டும்

3. பிக்ஹுல் அவ்லவிய்யா தொடர்பான ஆய்வுகள் இலங்கையை முன்மாதிரியாகக் கொண்டு மேற்க் கொள்ளப்பட வேண்டும்.

4. சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாமிய பல்கலைகழகங்களுடனான தொடர்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

5. இஸ்லாமிய சட்டத்துறை பிக்ஹுல் அவ்லவிய்யா போன்ற துறைகள் தொடர்பாக என்றும் ஆய்வுகளில் ஈடுபடும் ஆய்வாளர்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

**முடிவுரை**

சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் பிக்ஹ் அல் அவ்லவிய்யா பற்றிய தெளிவும் இஸ்லாமிய ஷரீஆவின் நெகிழ்ச்சிப் போக்கின் இயல்பையும் புரிந்து வாழுதல் இன்றியமையயாத தேவையாகும். இலங்கை போன்ற நாட்டிலும் இது பற்றிய தெளிவுடன் இருத்தலும் இது தொடர்பான ஆளணி வளமொன்று தொடச்சியான செயற்படுதலும் தமது

கால சூழலில் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண்பதும் முக்கிய தேவையாக உள்ளது. ஒரு விடயத்தின் நிறையை சரியான தருணத்தில் அளவீடு செய்ய முடியாத போது அதன் பினனணியில் உருவாகும் விளைவுகளும் பார தூரமானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பனமைத்துவ சமூக அமைப்பில் வாழும் இலங்கை முஸ்லிம்களும் எதனை முற்படுத்த வேண்டுமோ அதனையே முற்படுத்துவதும் எதனை முற்படுத்துவது பொருத்தமில்லையே அதனை முற்படுத்தாது இருப்பதும் முக்கியமானது. இதன் மூலம் இஸ்லாமிய எழுச்சியின் உத்வேகத்தையும் மற்றவரில் அது ஏற்படுத்தும் தாக்கமும் சமூக மாற்றத்தின் முறையான முன்னேற்றத்தையும் நாம் கண்டுகொள்ளமுடியும். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன்.

**பயன்பட்டவை**

**1.** ஜாமிய்யா நளீமிய்யா 2007 ,, இஸ்லரிய்ய சிந்தனை‘‘ நளீமிய்யாப் பதிப்பகம் பேருவலை, இதழ் மார்ச் - ஜுலை 2007

2. மஹ்மூத் அப்துல் ஹலீம் 1979 : அல் கஸ்வுல் பிக்ரிவஅஸருஹு பில் முஜ்தமஇல் இஸ்லாமி அலட் முஆஸர் , தாருல் இல்முல் கவுஹுஸிய்யா, குவைத்

3. முஹம்மது அல் வகீலி 1997 : பிக்ஹ் அல் அவ்லவிய்யா , வெளியீடு : இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்,அமெரிக்கா, முதலாம் பதிப்பு

4. முஹம்மத் ஹுமாம் அப்துர் ரஹீம் 2001 : தஹ்லீலிய்யா த.்.ஸீல் பிக்ஹ் அவ் அவ்லவிய்யா

5. மீள்பார்வை ( மாதாந்தப் பத்திரிகை )2010 , வெளியீடு மீள்பார்வை மீடியா சென்றர், இதழ் : ஆகஸ்ட்டு 2010

6. பரகாத் அப்துல் பத்தாஹ் 1980 : அல் ஹரகத்துல் பிக்ரிய்யா ழித்தல் இஸ்லாம் வஅஹதாபிஹி , வெளியீடு தாருத் துராஸுல் அரபி எகிப்து

7. ரவுப் ஸெய்ன் : கோளாறு எங்கே 2002(மொழிபெயர்ப்பு) இ மீள் பார்வை வெளியீடு கொழும்பு இலங்கை

8. ஸெய்யித் அப்துர் ரவூப் அப்துல் காதிர் 1987 : அத்தகாபா அல் இஸ்லாமிய்யா பி தஹத்தியாத் தஹத்தியாத் அல் முஆஸராஹ் , தாருத் திபாஅ அல் முஹம்மதிய்யா

9. ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி 1985 : மஅல்லாஹ் திராஸாத்துன் பித்த.்.வா வத்துஆத் , தாருல் குத்ப் அல் இஸ்லாமிய்யா

10. யூஸுப் அல் கர்ளாவி 2001: அவ்லவிய்யா அல் ஹரக்கா அல் இஸ்லாமிய்யா, மக்தபா வஹபா கெய்ரோ பதிப்பு :05

11. யூஸுப் அல் கர்ளாவி 1991: அர் றஸூல் வல் இல்ம் , தாருர் ரிஸாலா பைரூத் லெபனான் , முதலாம் பதிப்பு